காலம் தரித்து மிஸ்ர் சென்று அங்கேயும் சில காலங்கள் தங்கி ஷாம் நாட்டிற்குத் திரும்பி ஈலியா பலஸ்தீனுக் கிடையில் உள்ள அஸஂ௦ அர்ழா என்னுமிடத்தில் இறங்கினுர்கள். அங்கு வாழ்ந்த சில நரகவாசிகள் நபி யவர்களுக்கு துன்பமூட்ட எத்தனிக்கையில் அங்கு தரிக்காது ரம்லா ஈலியா என்ற ஒரு நகரத்துக்கிடையே ஓரிடத்தில் தரிக்கலானுர்கள்.

இப்னு சஃத் அவர்கள் வாகிதி கூறியதாக அறிவிப்ப தாவது,...

ولد لابراهيم اسماعيل وهو ابن تسعين سنة فعرف من هذين
الاثرين از بين هجرته من بابل عقيب واقعةالنار وبين الدعوةالتي
دعابها بمكة بضعا وخمسين سنة

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கட்கு ஹழ்ரத் இஸ்மாயீல் பிறக்கையில் 90 வயதைக் கொண்டவரா யிருந்தார்கள். ஆகவே அந்த இரண்டு ஹதீதுகளையும் அடிப்படையாகக் கொண்டு நெருப்பின் சம்பவத்திற்கு பின்பு பாபில் நகரிலிருந்து ஹிஜ்ரத் சென்றதற்கும், மக்கா முகர்ரமாவில் தன் பெற்றோர்களின் பாவங்களுக் குப் பரிகாரம் கோரியதற்குமிடைப்பட்ட கால எல்லை 50 வருடங்களை விட மேலானதாகும் எனக் குறிப்பிடுகின் றுர்கள்.

## நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களது சந்ததியினரின் அகீதா

ஹஜ்ரத் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், ஹஜ்ரத் நபி இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் இருவர்களினதும் புதல்வர்கள் ஏகத்துவக் கொள்கையிலேயே நிலையாக இருந்தனர். இதுபற்றி அல்லாமா ஷஹ்ர்ஷ்தானீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் "அல்மிலல் வந்நிஹல்"

எனும் நூலில் "தீன் இப்ராஹீம்" நிலையாக இருந்ததுடன் அரபிகளிடத்தில் பிரபல்யமிக்கதாகவும் இருந்தது. முதன் முதலாக தௌஹீதுக்கு நேர்மாற்றமாக சிலை வணக்கத்தை அறிமுகம் செய்தவன் அம்ரு பின் லுஹை என்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்நூல் ஆசிரியரும் இதனை ஸஹீஹான ஹதீஸ் எனக் குறிப்பிடுகின்றார். அத்துடன் புகாரி, முஸ்லிம் ஆகிய இரு கிரந்த ஆசிரியர்களும் ஹழ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு கூறிய கீழ்காணும் ஹதீதையும் குறிப்பிடுகின்றார்கள்.

قال رسول الله صلّى الله عليه وسلّم رأيت عمر بن لحي الخزاعي يجر قصبه في النار كان اوّل من سيب السوائب

நபிகள் பிரான் ﷺ அவர்கள் இயம்பினார்கள். அம்ருபின் லுஹை அல் கஸாயீ என்பவன் தன் மூக்கந் தண்டை நரகில் இழுத்துக் கொண்டிருக்க கண்டேன். இவனே ஸவாயிப் எனும் தீய கொள்கையை நிர்ணயித்தான்.

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது முஸ்னதில்

ان اوّل من سيب السوائب وعبد الاصنام ابو حزاعة عمرو بن عامر واني رأيته يجر امعاعه في النار

ஸவாயிப் எனும் தீய கொள்கையையும், சிலை வணக்கத்தையும் முதன் முதலாக ஆரம்பித்தவன் கொடியவனான அபூ குஸாஆ அம்ர் பின் ஆமிர் என்பவன் தான். இவன் தன் மூக்கந்தண்டை நரக நெருப்பில் இழுத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன் என்பதாக சந்திர வதன ஒளி ﷺ அவர்கள் கூறியதை ஹழ்ரத் இப்னு மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு

அவர்கள் அறிவித்ததாக குறிப்பிடுகிறார்கள்.

இப்னு இஸ்ஹாக், இப்னு ஜரீர் இருவரும் தத்தமது தப்ஸீர்களில்,...

رأيت عمرو بن لحي بن قمعة بن جندب يجر قصبه في النار انه اول من غير دين ابراهيم

அம்ரு பின் லுஹை பின் கும்ஆ பின் ஜுன்தப் என்பவன் தன் மூக்கந்தண்டை நரக நெருப்பில் இழுத்துச் செல்ல கண்டேன். ஏனெனில் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் மார்க்கத்தை மாற்றி அமைத்தவன் இவனே என எம்பிரான் ﷺ அவர்கள் நவின்றதாக ஹஜ்ரத் அபூஹுரைரா ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் அறிவிப்புச் செய்ததைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவன் தான் நபி இஸ்மாயீல் அவர்களின் மார்க்கத்தைப் புறக்கணித்தவனும் சிலை வணக்கத்தை முதலில் நிலை நிறுத்தியவனும், புஹைறா, ஸாயிபா, வஸீலா, ஹாம் போன்ற மிருகங்களை தங்களுக்கென உண்டுபண்ணியவன் ஆவான் என இப்னு இஸ்ஹாக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிட்டுள் ளார்கள்.

ஹஜ்ரத் பஸ்ஸார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர் கள் தனது முஸ்னத் பஸ்ஸார் எனும் நூலில் ஸஹீஹான ஸனதுடன் ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீதை கீழ்காணும் முறையில் அறிவிக்கிறார்கள்.

كان الناس بعد اسماعيل على الاسلام وكان الشيطان يحث الناس بالشيئ يريد ان يردهم عن الاسلام حتى ادخل عليهم

في التلبية لبيك اللهم لبيك لاشريك لك الاشريكا هولك تملكه
وماملك قال فما زال حتى اخرجهم عن الاسلام الى الشرك

நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குப் பின் மனிதர்கள் புனித இஸ்லாத்தில் தான் இருந்தனர். இதனை கண்ணுற்ற ஷைத்தான் மக்களை இஸ்லாத்தில் நுழைய விடாது புதிய புதிய அம்சங்களின் பக்கம் தூண்டி திசை திருப்பிக் கொண்டிருந்தான். மேலும் "லப்பைக் அல்லாஹும்ம லப்பைக் லாஷரீக லக இல்லா ஷரீக்கன் ஹுவ லக்க தம்லிகுஹு வமா மூல்க்" என்பதாக தல்பிய்யாவிலும் நூதனமான சொற்றொடர்களை நுழைத்தான் என குறிப்பிட்டதை பதிவு செய்துள்ளார்கள்.

அல்லாஹ்வின் இல்லமான கஃபாவை கைப்பற்றிய குஸாஆ என்ற தீயவனின் காலத்திலேயே அம்ரு பின் லுஹை என்ற கொடியவனும் வாழ்ந்து வந்தான். இவன் உருவாக்கிய புதிய புதிய அனுஷ்டானங்களுக்கு ஷரீஆவையே ஆதாரமாகக் காட்டினான். மேலும் இவன் புனித ஹஜ்ஜு கடமையை நிறைவேற்ற விடாது இடைமறித்து உணவளித்தும் வந்தான். ஹரம் ஷரீபில் முதன் முதலில் சிலைகளை நுழைப்பித்து அதனை வணங்க கட்டளை பிறப்பித்தவனும் "அம்ரு பின் லுஹை" தான்.

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் காலத்தில் "லப்பைக் அல்லாஹும்ம லப்பைக் லா ஷரீக லக லப்பைக்" என்ற தல்பியாவையே அம்ரு பின் லுஹையும் பிறர் போன்றே கூறி வந்தான். ஒரு நாளையத் தினம் வழமை போல் தல்பியா கூறிக் கொண்டிருக்கையில் கிழவனின் தோற்றத்தில் சமூகமளித்த ஷைத்தான் "லா ஷரீக லக்" என்பதற்கு பதிலாக "இல்லா ஷரீகன்" என்றான்.

இதனை செவியுற்ற அம்ரு, அவன் கூறியதை நிராகரித்தவனாக அவனுக்கு நிகரானவன் யார் எனக் கேட்டான். அல்லாஹ் எவர்களுக்கு அதிகாரத்தை வழங்கினானோ அவர்கள் அவனுக்கு நிகரானவர்கள். இப்படி கூறுவதில் குற்றமேதுமில்லை என்றான் ஷைத்தான். அம்ரும் அவனுக்கு வழிப்படலானான். இதன் விளைவாக அரபிகளும் அவ்வாறே கூறத் தொடங்கினர் என இமாம் ஸுஹைலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்.

قال الحافظ عماد الدين ابن كثير في (تاريخه) كانت العرب على دين ابراهيم الى ان ولي عمرو بن عامر الخزاعي مكة وانتزع ولاية البيت من اجداد النبي صلى الله عليه وسلم فأحدث عمرو بن المذكور عبادة الاصنام وشرع للعرب الضلالات من السوائب وغيرها وزاد في التلبية بعد قوله لبيك لاشريك لك الاشريكا هولك تملكه وماملك

ஹாபிஸ் இமாதுத்தீன் பின் இப்னு கதீர் ரஹ்மத்துல் லாஹி அலைஹி அவர்கள் தனது "தாரீக்" என்னும் வரலாற்றேட்டில் எம் கண்மணி நாயகம் ﷺ அவர்களின் மூதாதையினர் கரத்திலிருந்த ஹரம் ஷரீப் அம்ரு பின் ஆமீர் அல்குஸாஈ என்பவனால் கைப் பற்றப்படும் வரை அரபிகள் தீனெ இப்ராஹீமிலே தான் இருந்தனர் என்றும், நிர்வாகப் பொறுப்பைக் கைப் பற்றிய அம்ரு சிலை வணக்கத்தை ஏற்படுத்தினான் என்றும், அரபிகளுக்காக "ஸவாயிப்" எனும் தீய செயல்களைக் கொண்டு வழிகெடுக்க ஆரம்பித்தவன் "லப்பைக்க லா ஷரீக லக" எனக் கூறப்பட்ட தல்பியா வில் "இல்லா ஷரீகன் ஹுவலக" என்று குறிப்பிடுவ தோடு இவனின் செயல்முறைகளைப் பின்பற்றிய

அரபியர்கள் ஷிர்க்கிலே மூழ்கி நபி நூஹ் அலைஹிஸ் ஸலாம் மற்றும் பல முந்தைய சமுதாயங்களுக்கு ஒப்பான கொடியவனின் வலைக்கு சிக்கிடாது தீனெ இப்ராஹீமில் நிலைத்து இருந்தனர். 300 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி பீடத்தில் இருந்த குஸாஆ மிகக் கொடிய ஆட்சி செய்தான். இவ்விதமாக இவனின் அதிகாரம் கண்மணி நாயகம் ﷺ அவர்களின் முப்பாட்டனுர்களில் ஒருவரான ஹழ்ரத் குஸை அவர் கள் வரும் வரை நீடித்திருந்தது.

ஹழ்ரத் குஸை அவர்கள் அவனுக்கு எதிராக போர் தொடுக்க ஆரம்பிக்க அரபியர்களும் அவர்களுக்கு பக்கபலமாயிருந்து உதவி ஒத்தாசை புரியலானுர்கள். இதன் பலனுக ஹரம் ஷரீப் அக்கொடியவனின் கரத்தி லிருந்து மீட்கப்பட்டு அவன் அதிகாரம் பூண்டோடு ஒழிக்கப்பட்டது. இருந்தும் அரபியர்கள் ஹரம் ஷரீப் மீட்கப்பட்ட பின்னும் அவர்களிடையே அவன் ஏற் படுத்திய சில வணக்கம் மற்றும் பல காரியங்களை மார்க் கம் என கருதியதால் அதிலிருந்து மீழ்ச்சி பெருதிருந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் காலம் முதல் அம்ரு பின் லுஹை என்ற கொடியவனின் காலம் வரை மஹ்பூபு ரப்பில் ஆலமீன் ﷺ அவர் களின் அருமை பெற்ரோர்கள், பாட்டன்மார்கள் சந்தேகமற சகலரும் முஃமின்களாகவே இருந்திருக்கின்றனர் என்பது இம்மேற்கூறிய வரலாற்றம்சங்களிலிருந்து புலனுகின்றது.

## கலிமா தௌஹீத் தொடர்

இம்மேற்கூறிய விஷயத்தை மேலும் தெளிவு படுத்த ஹழ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் புதல்வர்கள் மற்றும் அவர்கள் பின் வருகின்ரோரின்

நிலைமை பற்றிய இறை வசனங்கள், வரலாற்று அம்சங்கள் உதவியாயிருக்கின்றன.

واذقال ابراهيم لابيه وقومه انني براء مما تعبدون الاالذي فطرني فانه سيهدين وجعلها كلمة باقية في عقبه

நபியே! நாயகமே! நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தனது தந்தை (சிறிய தந்தை) யையும், கூட்டத்தாரையும் நோக்கிக் கூறியதை நினைவுபடுத்துவீராக! நிச்சயமாக நான் நீங்கள் வணங்குபவைகளை விட்டும் விலகிக் கொண்டேன். எவன் என்னைப் படைத்தானோ அவனைத்தவிர (அவனையே நான் வணங்குவேன்) நிச்சயமாக அவனே எனக்கு நேர்வழி காண்பிப்பவன் என்ற வசனமாகும்.

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவித்ததாக ஹழ்ரத் அப்து பின் ஹுமைத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தனது தப்ஸீரில் தனது அறிவிப்புடன் ‘‘வஜஅலஹா கலிமதன் பாகியத்தன் பீஅகிபீஹி’’ என்பதற்கு லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற ஏகத்துவ சான்றிதழ் தான் நபி இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாமவர்களது பிள்ளைகள் மத்தியில் நிரந்தரமாயிருந்தது எனக் குறிப்பிடுகின்றார்கள்.

ஹழ்ரத் அப்துல் ஹுமைத் இப்னு ஜரீர் இப்னுல் முன்திர் ஆகியோர் ‘‘வஜஅலஹா கலிமதன் பாக்கியதன் பீ அகிபிஹி’’ என்பதற்கு லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதே என ஹழ்ரத் முஜாஹித் ரலியல்லாஹு அன்ஹு அறிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹழ்ரத் அப்துல் ரஸ்ஸாக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தன் தப்ஸீரில் ‘‘வஜஅலஹா கலிமதன் பாகி

யதன் பீ அகிபிஹி'' என்பதற்கு இக்லாஸ் தௌஹீத் என்பதாக கதாதா ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் விளக்கமளித்ததாக முஃமர் ரலியல்லாஹுஅன்ஹு அவர்களின் அறிவிப்பினைக் குறிப்பிட்டுள்ளார்கள். இதுவே நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹ்வை ஏற்று அவனுக்கு சிரம் சாய்ந்து வணங்கு பவர்களாக இருந்தனர் என்பதற்குரிய சான்ருகும்.

இப்னுல் முன்திர் அவர்கள் இந்த ரிவாயத்தில் ''பீ அகிபிஹி'' என்பதற்கு நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்குப் பின் அவர்களின் வம்சா வழியின ரிடையே அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் வஸ்து ஏதுமில்லை என்ற கொள்கையே நிரந்தரமாக இருந்தது என்பதாக இப்னு ஜதீர் விளக்கமளித்ததாக குறிப்பிட் டுள்ளார்கள்.

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் சமூகத்தார்களில் சிலர் அந்த நித்திய மார்க்கத்தை ஏற்று அல்லாஹ்வை வணங்குபவர்களாக இறுதி நாள் வரை இருந்து கொண்டே இருப்பர் என்றும் சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஹழ்ரத் அப்து பின் ஹுமைத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் மேலே இடம் பெற்ற இறை வசனத் திற்கு ''அல் அகிப்'' என்பது நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாமவர்களின் பிள்ளைகளும் அவர்களின் முது கெலும்புத் தொடரில் உள்ளோரும் என்பதாக அதாஃ ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் ரிவாயத் செய்ததாக வும் குறிப்பிட்டுள்ளார்கள்.

## அங்கீகரிக்கப்பட்ட பிரார்த்தனை

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் சந்ததி யினர் ஏகத்துவ கொள்கையிலேயே நிரந்தரமாக இருந்த

னர் என்பதற்கான அடுத்த சான்று கீழ்வரும் வசனமாகும்.

واذقال ابراهيم ربّ اجعل هذا بلدا أمنا واجنبني وبني از نعبد الاصنام

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள், இறைவா! இவ்வூரை (மக்காவை சமாதானமுள்ளதாய்) அச்சந்தீர்ந்ததாய் ஆக்குவாயாக! என்னையும் சிலை வணக்கத்திலிருந்து பாதுகாப்பாயாக எனப் பிரார்த்தனை செய்ததை நபியே! நினைவு செய்து பாருங்கள்.

(சூரா இப்ராஹீம் : 35)

இமாம் இப்னு ஜரீர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இந்த இறைவசனம் சம்பந்தமாக தனது தப்ஸீரில் ஹழ்ரத் முஜாஹித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத் செய்த ஒன்றை பின்வருமாறு குறிப்பிடுகிருர்கள்.

அல்லாஹுதஆலா நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தன் புதல்வருக்காக புரிந்த பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான். அதன் காரணமே அவர்களின் புதல்வர்களில் எவரும் அவர்கட்குப் பின் சிலை வணக்கம் புரியவில்லை. மேலும் அந்நகரத்தை அச்சம் தீர்ந்ததாக ஆக்குவாயாக எனக் கேட்டதையும் கபூல் செய்ததோடு அவர்களின் கூட்டத்தாருக்கு கனி வர்க்கங்களை உணவாகவுமாக்கி அவர்களை இமாமாகவும், அவர்களின் வம்சாவழியினரை தொழுகையை நிலை நாட்டுவோராகவும் ஆக்கினுன் என்று குறிப்பிடுகிருர்கள்.

இமாம் பைஹகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "ஷுஃபுல் ஈமான்" என்பதில் ஹழ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் பூமிக்கு இறக்கப்பட்டதும் அவர்களுக்கு தனிமை விரக்தி ஏற்பட்டது. இதுபற்றி

பைத்துல் ஹராம் உடைய வரலாற்றில் நீண்ட ஹதீதே வந்துள்ளது. அதில் அல்லாஹ் நபி ஆதம் அலைஹிஸ் ஸலாமவர்களைப் பற்றி கூறுகையில்,

நான் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு என் உத்தரவு கொண்டு என்பால் அழைக்கும் உம்மத்தை ஆக்குவேன். அவர், மக்களை என் பால் அழைப்பார். நானே அவர்களை நேர்வழியில் வழிநடத்துவேன்.

அவர் அவரது புதல்வர்களுக்காகவும், வம்சா வழியினருக்காகவும் புரியும் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வேன். அவர்களில் ஒருவரை "சிபாரிசு" மன்றாட்டம் புரிபவராகவும் ஆக்குவேன். அவர்களை நான் அவ் வீட்டின் பொறுப்பாளர்களாகவும், பரிபாலனம் செய் பவர்களாகவும் ஆக்குவேன் என அல்லாஹ் கூறியதாக பதிவாக்கியுள்ளார்கள்.

**கஃபாவின் பொறுப்பாளர்கள்**

இப்போது கூறப்போகும் விஷயம் சற்று முன்பாக கூறிய ஹழ்ரத் முஜாஹித் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கூற்றுக்கு நேர்பட்டதாகவும்,...

ولاشك ان ولاية البيت كانت معروفة باجداد النبيّ صلّى الله عليه وسلم خاصة دون سائر ذرّية ابراهيم الى ان انتزعها منهم عمرو بن الخزاعى

அம்ரு பின் குஸாயீ என்பவன் கஃபாவின் ஆட்சியை கைப்பற்றும் வரை நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களின் மக்களில் குறிப்பாக எம் கோமான் நபிகளார் ﷺ அவர்களின் பாட்டன்மார்கள் கரங்களி லேயே கஃபாவின் ஆட்சி அதிகாரம் இருந்தது என்பது பிரபல்யமான விஷயம் என்பதில் ஐயமில்லை. இடை

யில் சில காலம் அம்ருப்னு குஸாயீயிடம் இருந்தது. பின்பு கைமாறிய அதிகாரம் மீண்டும் அவர்கள் கரம் வந்தடைந்தது.

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் பிச் சளங்களில் இவர்கள் சிறந்தவர்கள். அல்லாஹ் இவர் களை "இஸ்திபாஃ" தேர்ந்தெடுத்து கண்ணியப்படுத் தும் நோக்கில் சொந்தமாக்கியுள்ளான். இவர்களில் எம் நபிகள் பிரான் ﷺ அவர்களின் பரிசுத்த ஒளி ஒருவர் பின் ஒருவராக திரும்பி வந்து இவர்களை சிறப் பாக்கியது. "ரப்பிஜ் அல்னீ முகீமஸ்ஸலாதீ வமின் துர்ரியத்தீ" இறைவா! என்னையும், என் வம்சாவழியின ரில் சிலரையும் தொழுகையை நிலை நாட்டுவோராய் ஆக்குவாயாக என்று நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் பிரார்த்தித்ததில், சிலர் எனக் குறிப்பிட்டுக் கேட்டதில் இவர்கள் முக்கிய நபராக பரிணமிக்கிருர்கள்.

இமாம் இப்னு அபீ ஹாதிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஹழ்ரத் ஸுஃப்யான் பின் உஐன ரலியல்லாஹுஅன்ஹு அவர்களிடம் யாரோ ஒருவர் "ஹல் அபத அஹதுன் மின் வுல்தி இஸ்மாயீல் அல் அஸ்னாம" ஹழ்ரத் நபீ இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலா மவர்களின் புதல்வர்களில் எவரும் சிலை வணக்கம் புரிந்துள்ளனரா? எனக் கேள்வி எழுப்ப இல்லை என பதிலளித்த ஹழ்ரத் அவர்கள், "வஜ்னுப்னீ அன்நஃபு தல் அஸ்னம" சிலைவணக்கத்திலிருந்து என்னையும், என் மக்களையும் பாதுகாப்பாயாக என இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாமவர்கள் பிரார்த்தனை புரிந்ததான இறைக் கூற்றை செவிமடுத்ததில்லையா? என்ருர்கள்.

இப்பிரார்த்தனையின் அடிப்படையில் தெரியவரும் இரண்டு விஷயங்களில் ஒன்று ...... ஹாதல் பலத ஆமினன் என்பதின் மூலம் மற்ற நகரங்கள் அன்றி பாதுகாக்கப்பட்ட நகரம் மக்கா மட்டுமே என்பது.

**மற்ருென்று :**

"வஜ்னுப்னீ வபன்னிய அன்னஃ்புதல் அஸ்னாம" என்பது நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் எல்லா மக்களையும் அம்மக்களின் சந்ததியையும் சிலை வணக்கத்தை விட்டும் அல்லாஹ் காத்துக் கொண்டான் என்பது தொடர்ந்தும் நபியவர்கள் இறைவா! என் புதல்வர்களில் சிலரை விவசாயமற்ற வெற்று நிலமான உன் மாளிகையின் அருகில் தொழுகையை நிலையுறச் செய்வதற்காக குடி அமர்த்தியுள்ளேன் என்றும் கூறினுர்கள்.

பல கலையிலும் தேர்ச்சி பெற்றவரும், இமாம்களில் ஒருவருமான ஹழ்ரத் ஸுப்யான் பின் உஜனு ரலியல் லாஹு அன்ஹு அவர்களின் பதிலை பார்வையுடை யோரே சற்று கண்களை திறந்து தான் பாருங்களேன். இவர் எம்மெல்லோரின் இமாமான ஹழ்ரத் ஷாபிஃ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் ஷெய்கு என்பது நினைவு கூறத்தக்கதாகும்.

**நித்திய மார்க்கத்தில்**
**நிலைத்து நின்ற சந்ததியினர்**

رَبِّ اجعلني مقيم الصّلوة ومن ذرّيّتي ربّنا وتقبل دعاء

ஹழ்ரத் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் இறைவா! என்னையும், என் சந்ததியில் சிலரையும் தொழுகையை நிலை நட்டுவோராக்குவாயாக என்று இருகரம் ஏந்தியதாக இறைவனின் திருமறை சான்று எமது மூன்ருவது ஆதாரமாகும்.

ஹழ்ரத் இப்னுல் முன்தீர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் புதல்வர்களில் சிலர் நித்திய மார்க்கத்தில் நிலையாய் இருந்ததோடு இறைவனுக்கு சிரம் சாய்ப்போராகவும்

நீங்காதிருந்தனர் என்பதாக இவ்விறை வசனத்திற்கு இப்னு ஜுரைஜ் ரலியல்லாஹு அன்ஹு விளக்கமளித்துள்ளார்கள் என குறிப்பிட்டுள்ளார்கள்.

அபுஷ் ஷெய்க் அவர்கள் தனது தப்ஸீரில் ஹழ்ரத் ஸாரா அலைஹஸ்ஸலாமவர்களுக்கு அமரர்கள் வாழ்த்துச் செய்தி கூற நாயகியார் அவர்கள்

يا ويلتى ءألد وانا عجوز وهذا بعلي شيخا ان هذا لشيئ عجيب

ஆக! கைசேதமே! நான் முதியவளாகவும் என் கணவர் முதியவராகவும் இருக்கும் நிலையில் நான் குழந்தை பெறுவேனா? நிச்சயமாக அது ஆச்சரியமான விஷயம் தான் எனக்கூற அமரர்கள் நாயகியாரை பார்த்து

اتعجبين من امر الله رحمة الله وبركاته عليكم اهل البيت انه حميد مّجيد

அல்லாஹ்வின் கட்டளையைப்பற்றி ஆச்சரியப்படுகின்றீர்களா? அல்லாஹ்வின் ரஹ்மத்தும், அவனுடைய பரக்கத்தும் (அருளும், பாக்கியமும்) இவ்வீட்டிலுள்ள உங்கள்மீது உண்டாவதாக! நிச்சயமாக அவன் புகமுடையவனுகவும் மகிமை வாய்ந்தவனுகவும் இருக்கிருன் என்றனர். இவ்வத்தியாயம் எமது நான்காவது ஆதாரமாகும். இவ்வசனம் ‘‘வஜஅலஹா கலிமதன் பாக்கியதன் பீ அகிபிஹீ’’ என்பது போன்றிருக்கிறது. நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் மூதாதையர் இதனுள் அடங்குவர் என்று ஹழ்ரத் ஜைத் பின் அலீ அவர்கள் ரிவாயத் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹழ்ரத் இப்னு ஹபீப் அவர்கள், அத்னன், மஃத், ரபீஆ முழர், குஸைமா, வாதிலா ஆகியோர் நபி

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் மார்க்கத்தி லேயே இருந்தனர். எனவே அவர்கள் விஷயமாக நல்ல வற்றையே நினைவு கூறுங்கள் என்று நபிகட்கரசர் முஸ்தபா صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ அவர்களது அமுதமொழியை தப்ஸீர் கலை வல்லுனர் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவித்ததாக தனது ''தாரீக்'' எனும் வரலாற்றேட்டில் பதிவு செய்துள்ளார்கள்.

## நபிகளார் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ அவர்களின் முன்னோரைக் கொண்டு வஸீலா

வரலாற்ருசிரியருன அபூ ஜஃபர் அத்திப்ரீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி மற்றும் பலரும் பின்வரும் நிகழ்வை குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது:-

وذكر ابو جعفر الطبري وغيره ان الله اوحي الى أرمياء أن
اذهب الى بخت نصر وأعلمه أني قد سلطته على العرب وامر الله
ارمياء أن يحتمل معه معد بن عدنان على البراق كي لا يصيبه النقمة
فاني مستخرج من صلبه نبيا كريما اختم به الرّسل ففعل ارمياء
ذالك واحتمل معدا الى ارض الشام فنشأ مع بني اسرائيل ثم
عاد بعد أن هدأت الفتنة

அல்லாஹு தஆலா ஹழ்ரத் அர்மியாவிற்கு புக்த் நஸ்ர் என்பவரிடம் சென்று அரபுப் பிரதேசத்தைக் கைப்பற்ற போவதாக கூறும் படியும் அங்கு பயண மாகும் சமயத்தில் தடங்கல்கள் நிகழாதிருக்க ஹழ்ரத் மஃத் பின் அத்னன் என்பவரையும் தன்னேடு பிரயாணக் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளும் படியும் அவர் முதுகெலும்பிலிருந்து ஓர் சங்கையான நபியை வெளிப்படுத்துவேன் என்றும், அவர் நபித்துவத்தின்

முத்திரையாகவும் திகழ்வார் என்றும் வஹீ அறிவித்தான்.

அல்லாஹ்வின் கட்டளை பிரகாரம் ஹழ்ரத் அர்மியா அவர்கள் ஹழ்ரத் மஃத் பின் அத்னன் அவர்களை தன்னோடு அழைத்துச் சென்று புக்த் நஸ்ருக்கு விஷயத்தை கூறினார்கள். இடையிடையே பனீ இஸ்ரவேலர்களின் இன்னல்களுக்கும் முகம் கொடுக்கலானார்கள். பிரச்சனைகள் யாவும் தணிந்த பின்னர் நாடு திரும்பினர்.

ஹழ்ரத் இப்னு சஃத் அவர்கள் "அத்தபகாத் எனும் தனது நூலில் "லா தஸுப்பூ முழர ஃபஇன்னஹு கான கத் அஸ்லம்" முழரை ஏசாதீர்கள். நிச்சயமாக அவர் புனித இஸ்லாமியராயிருந்தார் என்ற நபிகள் கோமான் ﷺ அவர்களின் திரு மொழியை ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் காலித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள் என குறிப்பிட்டுள்ளார்கள்.

## கருணை நபி பெற்றோரை கண்ணியப்படுத்துங்கள்

இமாம் ஸுஹைலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "அர் ரௌலுல் உன்ஃப்" எனும் கிதாபில் "லா தஸுப்பூ முழர வலா ரபீஅத ப இன்னஹுமா கானா முஃமினைனி" முழரையும், ரபீஆவையும் ஏசாதீர்கள். நிச்சயமாக அவ்விருவரும் முஃமினீன்களாயிருந்தனர் என்பதாக ரிவாயத் செய்துள்ளார்கள்.

இந்த ஹதீதின் ஸனதுடைய வரிசையை நான் நன்கறிந்தவன். இதனை வகீஃ என்று பிரபல்யமாக அழைக்கப்பட்ட அபூபக்ர் முஹம்மது பின் கலப் பின் ஹய்யான் அல் குரர் எனும் நூலில் ஹழரத் இஸ்ஹாக் பின் தாவூத் பின் ஈஸா அல் மரூஸி அபூ யஃகூப் அஷ்ஷஃரானீ, சுலைமான் பின் அப்துர் ரஹ்மான் அத்திமஷ்கி, உத்மான் பின் காயித், யஹ்யா பின்

தல்ஹா பின் உபைதுல்லாஹ், இஸ்மாயீல் பின் முஹம்மது இப்னு சஃத் பின் அபீ வக்காஸ் ஆகியோர் ரபீஆவையும், முழரையும் தரக்குறைவாக ஏசிப் பேசாதீர்கள். திடனாக அவ்விருவரும் முஸ்லிம்களாக இருந்தனர் என்ற நபிகள் கோமான் ﷺ அவர்கள் அருள்மொழியை ஹழரத் ஸித்தீக்குல் அக்பரின் புதல்வர் ஹழரத் அப்துர் ரஹ்மான் ரலியல்லாஹு அன்ஹு மூலம் கிடைக்கப் பெற்றதாக ஒருவர் பின் ஒருவராய் அறிவிப்பு செய்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்விதமாக ஹழ்ரத் உம்முல் முஃமினீன் ஸெய்யிததுனா ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹு அன்ஹா அவர்களும், "தமீமையும், மூப்பாவையும்" ஏசாதீர்கள். நிச்சயமாக அவர்கள் முஸ்லிம்களாயிருந்தனர் என்று ரிவாயத் செய்துள்ளார்கள். மேலும் "கைஸை இழிவாகக் கருதாதீர்கள்" ஏனெனில் நிச்சயமாக அவர் முஸ்லிமாயிருந்தார் என்ற திருநபி ﷺ அவர்கள் அருள்மொழியை ஹழரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

தொடர்ந்து இமாம் ஸுஹைலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஹழ்ரத் இல்யாஸை இழிவான வார்த்தைகளை கொண்டு விளிக்காதீர்கள். ஏனெனில் அவர் முஃமினாக இருந்தார் என்ற நபிமொழியை எடுத்துரைத்தபின் நபியுல்லாஹ் ﷺ அவர்கள் ஹஜ்ஜிற்கான தல்பியாவை மொழிந்த சப்தத்தை என் விலா எலும்பில் நின்றும் செவியுற்றதாகக் கூறியதையும் இடம் பெறச் செய்துள்ளார்கள்.

மேலும் கஃபு இப்னு லுஐ என்பவரே அரூபா என்ற தினத்தை ஏற்படுத்தியவரும், அத்தினத்திற்கு "ஜும்மா

8

வின் நாள்'' எனப்பெயரை முதலில் இட்டவருமாவார். குறைஷிகள் இந்த நாளில் ஒன்று திரள இவரே அவர்கள் மத்தியில் பிரசங்கம் புரிபவராகவும் நபிகளார் صلى الله عليه وسلم அவர்களின் வருகைபற்றியும் அம்மாநபியின் குழந்தைகளில் ஒருவர் அவரைப்பின்பற்ற வேண்டும். அவரை ஈமான் கொள்ள வேண்டும் என்றும் கற்றுக் கொடுப்போராகவும் இருந்தார். இந்நிகழ்வுகள் யாவற்றையும் இமாம் மாவறுதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ''கிதாபுல் அஃலாம்'' எனும் நூலில் வரைந்துள்ளார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த அறிவிப்பினை ஹாஃபிழ் அபூ நயீம் அவர்களும், அபி சல்மா பின் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சனதைக் கொண்டு ''தலாயிலுந்நுபுவ்வத்'' தில் குறிப்பிட்டுள்ளார்கள். அத்தோடு இதன் இறுதியில் ஜணாப் கஃப் அவர்களின் வபாத்திற்கும், கருணைக்கடல் எம்பிரான் صلى الله عليه وسلم அவர்களின் வருகைக்குமிடைப்பட்ட கால எல்லை 560 வருடங்கள் என்பதையும் சேர்த்துள்ளார்கள்.

இங்கே குறிப்பிடப்பட்ட இமாம் மாவறுதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் எமது அயிம்மாக்களின் தோழர்களில் ஒருவரும், ''அல்ஹாவில் கபீர்'' மற்றும் கணக்கிட முடியா பிரயோஜனமிக்க பல விடயங்களை பொதிந்த ''அஃலாமுந்நுபுவ்வத்'' என்ற நூலினதும் ஆசிரியருமாவார்.

அந்நூல் பார்வையிடப்பட்டு அதிலிருந்து பல அம்சங்கள் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவைகளின் சாராம்சம் எதுவெனில் என் கோமான் صلى الله عليه وسلم அவர்களினது பெற்றோர்கள் ஹழ்ரத் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் முதல் ஹழ்ரத் கஃபுப்னு லுஐ அவர்கள் வரையிலான சகலரும் நபி இப்ராஹீம்

அலைஹிஸ்ஸலாமவர்களின் மார்க்கத்திலேயே இருந்த னர். ஹழ்ரத் கஃபின் புதல்வர் ஹழ்ரத் மூர்ராவும் இந்நிலையில் தான் இருந்துள்ளார். தந்தையான ஹழ்ரத் கஃபு பிறருக்கு உபதேசம் புரிந்தது போன்று தமது மகனுக்கும் உபதேசம் செய்துள்ளார்கள்.

## ஹழ்ரத் அப்துல் முத்தலிப் பற்றி முக்கருத்துக்கள்

ஜனுப் மூர்ரா பின் கஃப் அவர்களுக்கும், ஹழ்ரத் அபூதாலிபுக்கும் இடையே ஜனுப் குஸை, ஜனுப் அப்துல் முனுப், ஜனுப் ஹாஷிம் இந்நான்கு பெரியோர் களும் உள்ளனர். இந்நான்கு பெரியோர்கள் பற்றிய எவ்வித தகவல்களையும் பெற்றுக்கொள்ள இடம் பாடிருக்கவில்லை.

ஆனுல் ஹழ்ரத் அப்துல் முத்தலிப் சம்பந்தமாக கீழ்வரும் மூன்று சொற்களையும் காணலாம்.

*1)* இமாம் புகாரி மற்றும் அவர்களின் அறிவிப்பு களின் பிரகாரம் இவரை இஸ்லாமிய தஃவத் சென்றடையவில்லை என்பதாகும்.

*2)* இமாம் ஃபக்ருத்தீன் ராஸியின் கூற்றுப்படி இவர் ஏகத்துவவாதியாக இருந்ததோடு நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் மார்க்கத்திலும் இருந்துள் ளார் என்பதும் புலனுகிறது.

*3)* இவர் மரணமுற்ற பின்பு உயிர்ப்பிக்கப்பட்டு நபிகளார் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கரத்தில் ஈமான் கொண்டு பின் மரணமடையச் செய்யப்பட்டார். இதனை இப்னு ஸெய்யதிந்நாஸ் அறிவித்துள்ளார்.

இம்மூன்றும் கருத்து மிகமிக பலகீனமானதும்

ஆதாரமற்ற ஒன்றுமாகும். இதுபற்றிய ழயீஃபான ஹதீஸ் கூட இடம்பெறவில்லை. சுன்னத் வல் ஜமாஅத் இமாம்களில் எவரும் இதுபோல் கூறியதாகவுமில்லை. மாறாக ஷியாக்களில் சிலரே இவ்விதமாக கூறியுள்ளனர்.

இதனால் தான் பெரும்பாலான நூலாசிரியர்கள் இம்மூன்றில் இரண்டோடு போதுமாக்கி மூன்றாவதில் மௌனியாகி விட்டனர்.

## ஹழ்ரத் அபூதாலிபின் நிலை

قال السهيلي في (الروض الانف) وفي الصحيح أن رسول الله صلّى الله عليه وسلّم دخل على ابي طالب عند موته وعنده ابوجهل وابن ابي امية وقال... ياعم قل لااله الاالله كلمة اشهدلك بها عند الله فقال له ابوجهل وابن ابي امية أترغب عن ملة عبدالمطلب فقال... أنا على ملة عبدالمطلب

ஹழ்ரத் இமாம் சுஹைலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "ரௌழுல் உன்ப்" எனும் நூலில் புகாரி ஷரீபில் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடும் ஒன்றாகிறது. ஹழ்ரத் அபூதாலிப் அவர்கள் மரணப்படுக்கையில் வீற்றிருக்கையில் அவரைச் சந்திக்க நபிகளார் ﷺ அவர்கள் சென்றிருந்தார்கள். இத்தருணம் அவர் அருகிலே அபூஜஹ்ல், இப்னு அபூ உமையா போன்றோரும் சமூகமளித்திருந்தனர். கண்மணி நாயகம் ﷺ அவர்கள் என் அன்பின் சிறிய தந்தையே "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்பதாக மொழியுங்கள். அதுவே உங்கள் விஷயத்தில் சாட்சியளிக்கப் போதுமாகி விடும் எனக்கூறினார்கள். அவர் அருகே உட்கார்ந்திருந்த அபூ

ஜஹ்லும், அவரது தோழரும் அப்துல் முத்தலிப் உடைய மார்க்கத்தை புறக்கணிக்கப் போகின்றாயா? வேண்டாம் என்றனர். அவரும் இவர்களது கூற்றுக்கே தலையும் சாய்த்தனர்.

இந்த ஹதீஸின் வெளிரங்கம் அபூதாலிப் ஷிர்க்கில் மரணமுற்றார் என்பதை உணர்த்துவது போன்று தெரிகிறது. ஆனால் நான் (சுஹைலி) இமாம் மஸ்ஊதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் சில நூல்களில் இது பற்றி பார்த்த சமயத்தில் இதற்கு மாற்றமான சில கருத்துகளை கண்டேன். அதாவது:-

ஹழ்ரத் அபூதாலிப் அவர்கள் எம் கோமான் நபிகள் பிரான் ﷺ அவர்களின் நபித்துவத்தின் அத்தாட்சிகளைக் கண்ணால் கண்டுள்ளார். அவர்களுக்கு எதிரிகளால் பங்கம் விளையாவண்ணம் பாதுகாப்பாகவும் இருந்திருக்கின்றார்கள். குறைஷி காபிர்கள் தாம் கொண்ட கொள்கைக்கு தமையன் எதிரியாக இருப்பினும் அவனைக் கொலை செய்வதில் கண்ணாயிருந்தார்கள் என்பது யாமறிந்த உண்மை. இப்படியான கெட்ட சுபாவம் கொண்டவராக அபூதாலிப் இருந்திருப்பின் கடைசி தருணம் வரை நாயகம் ﷺ அவர்களை கண் இமை போன்று காத்திருக்க மாட்டார்கள். எனவே இவர்கள் மறுமையில் ஏகத்துவவாதியாகவே எழுப்பப்படுவார் என இந்நூலாசிரியர் கூறுகின்றார். “அல்லாஹு வ ரஸூலுஹு அஃலம்”.

## ஹழ்ரத் அப்துல் முத்தலிப் கியாம நாள் மீது ஈமான்

இமாம் ஷெஹ்ருஸ் தானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் நபி பெருமானார் ﷺ அவர்களின் பரிசுத்த நூர் ஹழ்ரத் அப்துல் முத்தலிபின் முதுகெலும்பில் இருந்ததன் காரணமே அவர்கள் மகனை அறுப்பதற்கு

நேர்ச்சை செய்ததும், அவரது புதல்வர்களை நற்குணங்கள் உடையவர்களாக மாற்றி தீய பழக்கங்களை செய்ய விடாது தடுத்ததும் அவர் அவரது புதல்வர்களுக்கு நல்லுபதேசம் புரிகையில் அநீதம் புரிபவன் அதற்கான கூலியை அங்கேயே பெறுது செல்வதில்லை என்று கூறியதாகவும் தமது ''அல்மிலல் வந்நிஹல்'' என்னும் நூலில் குறிப்பிட்டிருந்தார்கள்.

அங்கே வீற்றிருந்தோரில் ஒருவர் இவ்வுலகில் கூலி கிடைக்காது மரணித்து விட்டால் என்னவாகும் எனக் கேட்க, சற்று யோசித்த பின்பு இந்த வீட்டின் பின்னால் மற்றுமொரு (மறுமை) வீடு உள்ளது. அங்கே நல்லது புரிந்தவர்களுக்கு நற்கூலியும், பிறருக்கு அதற்கான தண்டனையும் கிடைக்கும் என்றார்கள்.

எம் கோமான் நபி ﷺ அவர்களின் நூர் அவரில் இருந்ததின் பரக்கத்தினால் தான் கஃபாவை கைப்பற்ற வந்த அப்ரஹாவை நோக்கி அதனை அதன் இரட்சகனே பாதுகாப்பான் என கூறியதும் என்பதாக அல்லாமா ஷெஹ்ருஸ்தானி குறிப்பிடுகின்றார்கள்.

அல்லாமா இப்னு சஃத் அவர்கள் தனது ''தபகாத் இப்னு சஃத்'' எனும் நூலில் அன்று அவர்கள் மத்தியில் ''தியத்'' உடைய விஷயத்தில் பத்துக்கு ஒரு ஒட்டகம் என்ற கோட்பாட்டில் இருந்தனர். ஹழ்ரத் அப்துல் முத்தலிப் அவர்களே ஒன்றுக்கு நூறு என்ற சட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்கள். எம் கோமான் நபிகள் பிரான் ﷺ அவர்களும் அதனை பின்பற்றியவர்களாகவே நடந்தார்கள். அத்தோடு நபிகள் நாயகம் ﷺ அவர்கள் ஹுனைன் யுத்த தினத்தன்று ஹழ்ரத் அப்துல் முத்தலிபை புகழ்ந்துரைக்கும் வண்ணமாக ''அனந் நபிய்யு லா கதிப் அனப்னு அப்துல் முத்தலிப்'' என்றார்கள்.

இமாம் பக்ருத்தீன் ராஸி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும், அவர்களது தோழர்களும் எவ்வாதாரங் களை எல்லாம் இம்மஸ்அலாவிற்கு தகுந்த சான்றுதலாகக் கருதினார்களோ அவைகளை விட நான் அப்துல் முத்தலி புடைய புதல்வர் என்ற திருமொழி சக்தி வாய்ந்ததாகும்.

நபியுல்லாஹ் ﷺ அவர்களோ எவரும் தன்னை தன் காபிர்களான பெற்றோர்களுடன் தொடர்பு படுத்தி பேசாதீர்கள் என மொழிந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள்.

இந்நிலையில் நபிகள் கோமான் ﷺ அவர்கள் தன் பெற்றோரோடு இணைத்து கூறியிருப்பதிலிருந்து அவர்களது பெற்றோர்கள் எங்ஙனம் காஃபிர்களாக இருந்திருக்க முடியும்? (நவூதுபில்லாஹ்)

இமாம் பைஹகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர் கள் "ஷுஃபுல் ஈமானில" ஹழ்ரத் உபை பின் கஃப், ஹழ்ரத் முஆத் பின் ஜபல் இருவரும் ரிவாயத் செய்த தைக் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது,

روى البيهقى فى (الشعب) من حديث ابيّ بن كعب ومعاذ بن جبل ان رجلين استبّا على عهد رسول الله صلّى الله عليه وسلّم فقال احدهما انا فلان بن فلان انا فلان بن فلان فقال رسول الله صلّى الله عليه وسلّم . . . استب رجلان على عهد موسى عليه السلام فقال احدهما . . . أنا فلان بن فلان الى تسعة قال الآخر أنا فلان بن فلان الاسلام فأوحى الله الى موسى عليه السلام هذان

المستبان أما انت ايها المنتسب الى تسعة آباء في النار فانت

عاشرهم في النار واما انت ايها المنتسب الى اثنين فأنت ثالثهما في الجنة

ரசூலே கரீம் ﷺ அவர்கள் காலத்தில் இரு மனிதர்கள் தங்களை தங்கள் பெற்றோர்களோடு தொடர்பு படுத்திப் பேசினர். அவர்களில் ஒருவர் நான் இன்னார் மகன் என்றான். இதனைச் செவியுற்ற ரசூல் ﷺ அவர்கள் நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்தில் இருவர் தத்தமது பெற்றோர்கள் பற்றி பெருமிதமாகப் பேசிக் கொண்டிருந்தனர். ஒருவர் அவரது ஒன்பதாவது தலைமுறை வரைப் பேசினார். மற்றவர் நான் இன்னான் மகன் இன்னான் முஸ்லிம் என்றார்.

அப்போது அல்லாஹ் நபியவர்களுக்கு வஹீ மூலம் இவ்விருவர்களில் ஒன்பதாவது தலைமுறை வரை பேசிய வனைப் பார்த்து நீயும் உமது தலைமுறையும் நரகில் என்றும், இரு தலைமுறைகளைப் பேசியவனைப் பார்த்து நீயும் உன் இரு தகப்பன்மார்களும் சுவர்க்கத்திலே எனக் கூறுமாறு அறிவித்தான். இமாம் பைஹகீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்களும் இத்தொடரில் மற்று மொரு அறிவிப்பை ஹழ்ரத் அபூ ரைஹானா ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக குறிப்பிடுகிறார் கள். அதாவது எவன் தனது காபிரீன்களாக பெற்றோர் களை பெருமைப்படுத்தும் எண்ணத்தில் ஒன்பதாவது தலைமுறையைத் தொடர்புபடுத்தி பேசுகின்றானோ அவர்களோடு பத்தாவது தலைமுறையாக அவனும் நரகம் செல்வான் என்றார்கள்.

இமாம் பைஹகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர் கள் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை தொட்டும் அறிவிப்பதாவது:-

மௌட்டீகத்தில் மரித்த உங்கள் பெற்ரேர்களைப் பெருமிதப்படுத்தி பேசாதீர்கள். எவன் கரத்தில் என் உயிர் உள்ளதோ அவன் மேல் ஆணையாக மௌட்டீகத்தில் மரித்த உங்கள் பெற்ரேர்கள் மூக்கில் மலத்தை உருட்டித் திரியும் மலமுருட்டி வண்டை விட சிறந்தவர்களில்லை என்ருர்கள் மாநபி ﷺ அவர்கள்.

இவ்வறிவிப்பை இமாம் பைஹகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஹழ்ரத் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அறிவித்ததாகவும் குறிப்பிட்டிருக்கின்ருர்கள். இத்தலைப்பில் பல தரப்பட்ட ரிவாயத்துக்களை ஹதீது நூற்களில் காணப்பெறலாம். அவைகளில் மிகத் தெளிவானது முஸ்லிம் ஷரீபில் இடம் பெற்றுள்ளது போன்று இமாம் பைஹகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "ஷுஃபுல் ஈமானில்" குறிப்பிட்ட, எனது உம்மத்தினர் மௌட்டீகக் கால நான்கு விஷயங்களை விட்டபாடில்லை. அதில் ஒன்று அவர்கள் பெற்ரேர்களை பெருமிதப்படுத்தி பேசுவதாகும்.

சந்தேகமின்றி இந்த ஹதீத்கள் யாவும் என்னை அல்லாஹ் பனீஹாஷிம்களில் நின்றும் தேர்ந்து எடுத்துள்ளான் என்பதாக தம் முன்னேரை ﷺ அவர்கள் உயர்வுபடுத்தி பேசியதற்கு சான்ருக அமைகிறது.

ஹுலைமீ அவர்கள் இதுபற்றிக் கூறுகையில் நபிகளார் ﷺ அவர்களை பெருமிதமாகப் பேசியது காபிர்கள் பேசியது போன்றல்ல என்கிருர்கள்.

# நபிகளார் ﷺ அவர்களின் பெற்றோர்

சந்தேகமின்றி அல்லாஹுதஆலா எம்பெருமானர் ﷺ அவர்களை அழகுமிகுந்த மணவாளர்கள் மத்தியில் நின்றுமே தேர்ந்து எடுத்தான். தீய குண நடத்தைகளில் நின்றும் அவர்களை பாதுகாத்தும் வந்தான். மேலும் பரிசுத்த முதுகெலும்புகளிலிருந்து தூய்மை யான கற்பறைகளுக்குத் திருப்பிய வண்ணமாகவு மிருந்தான்.

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "வதகல்லுபக ஃபிஸ்ஸாஜிதீன்" என்ற திருமறை வசனத்திற்கு விளக்கமளிக்கையில் நபிகள் பிரான் ﷺ அவர்களின் பரிசுத்த நூர் இவ்வைய கத்திற்கு உதயமாகும் வரை அவர்கள் பெற்றோர்கள் மத்தியில் திருப்பப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தங்கள் மத்தியில் நபித்துவத்தின் ஒளி நூர் பிறக்க போவதைக் கண்குளிர கண்டு களித்தும் கொண்டிருந்தார்கள்.

நபிகளார் ﷺ அவர்களின் பெற்றோர் தரப் பிலும் அவர்களது எந்த சகோதர சகோதரியும் ஷிர்க்கின் வலையில் வீழ்ந்ததாகவுமில்லை. தன் பிரிய நேசர் உதய மாகும் வழிகள் யாவும் ஷிர்க் எனும் தீரா வியாதி யிலிருந்து நீங்கியதாயிருக்க வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் அவர்களது பெற்றோர்களை பாதுகாத்து வந்தான். நபிமார்களை, ரஸூல்மார்களை அதிலும் எம் கோமான் நபிகள் பிரான் ﷺ அவர்களை கண்ணியப்படுத்தி உயர்த்துவதே இதன் உண்மை நோக்கமாகும்.

ஷிர்க் எனும் கொடிய வியாதியிலிருந்து பாதுகாக்கப்

பட்ட எம் நபிகள் பிரான் ﷺ அவர்களின் பெற்றோர்கள் பித்ரத்திலே மரணமுற்று விட்டதால் கியாம நாளன்று சகலரும் முன்னிலையில் குறிப்பாக காபிர்களுக்கு அவனின் நேசரது மகத்துவத்தை, உயர் நிலையை மறுத்துரைத்த, நயவஞ்சகர்களின் முகமூடியை கிழித்தெறிய, சிபாரிசின் மூலம் தன் பெற்றோர்களை ஜெயம் பெற்றவர்களாக மாற்றிக் காட்டவே அருமைத் தகப்பனை சிசுவாக இருக்கையிலும், பாசத்தாயை மழலைப்பருவத்திலும் தன் வசம் அழைத்துக் கொண்டான்.

இவ்விதமாக உயர்நிலையில் வீற்றிருக்கும் எம் கண்மணி நாயகம் ﷺ அவர்களின் பெற்றோர்கள் எவ்விதம் அவனுக்கு மாற்றமான செயல்களை புரிந்திருப்பர்? அல்லாஹ் தானே அவர்களைப் பாதுகாத்திருக்கையில் அவர்கள் விடயத்தில் இப்படியான கேள்வியே எழ சாத்தியமாகாது.

''மஆனில் குர்ஆன்'' எனும் திருமறை விரிவுரை நூலாசிரியர் அல்லாமா அபூ ஜஃபர் அந்நுஹாஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ''வதகல்லுபக ஃபிஸ்ஸாஜிதீன்'' என்ற இறை பேச்சிற்கு நபிகளார் முஸ்தபா ﷺ அவர்கள் இவ்வையகத்தில் உதயமாகும் நாள் வரை இறைவனுக்கு சிரம் சாய்க்கும் - சுஜூது செய்வோர்களிடையே மாற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதாக ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ரிவாயத்தை குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹாஃபிஸ் ஷம்சுத்தீன் பின் நாஸிருத்தீன் அத்திமஷ்கீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொல்லை அழகுபடுத்திய வஸ்துவென்ன? என்று ஆச்சரியப்பட்டு இந் நூலாசிரியர் சுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி

அவர்களே கூறுமளவிற்கு என்ன அமுதத்தைக் குறிப்பிட்டுள்ளார்?

تنقل أحمد نورا عظيما    تلألأ في جباه الساجدينا

تقلب فيهم قرنا فقرنا    الى ان جاء خير المرسلينا

حفظ الاله كرامة لمحمد    آباءه الامجاد صونا لاسمه

تركوا السفاح فلم يصبهم عارة    من آدم والى ابيه وأمها ألأفى

அஹ்மதே முஜ்தபா முஹம்மதே முஸ்தபா ﷺ அவர்களின் பரிசுத்த நூர் சஜ்தா செய்வோரின் மத்தியிலே திரும்பிக் கொண்டேயிருந்தது. அனுப்பப்பட்டோரில் சிறந்தவராக உதயமாகும் வரை ஒருவர் பின் ஒருவராக காலந்தொட்டு காலமாக புரண்டு கொண்டேயிருந்தார்கள்.

நபிகளார் ﷺ அவர்களுக்கு வழங்கிய சிறப்பு மிக்க பெயரின் மகத்துவத்தை பாதுகாக்கும் முகமாக எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களின் பெற்ரோரைப் பாதுகாத்தான்.

ஹழ்ரத் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தொடக்கம் ஹழ்ரத் அப்துல்லாஹ் அன்னை ஆமினா வரையான பெற்ரோர்கள் இரத்த வெறி பிடித்தவர்களாகவோ, ஆடை அற்ரோர்கள் புரியும் செயல்களைக் கொண்டோராகவோ இருந்ததில்லை என்று கூறியதுவே அவர் அமிர்தமாகும்.

## அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் நிலை

கஸீதா புர்தா எனும் பொன்னாடை நூலாசிரியர்

அல்லாமா இமாம் பூஸரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி பின்வரும் சொற்றொடர்களின் மூலம் கண்மணி நாயகம் ﷺ அவர்களுக்கு பொன்மாலை சூடுகின்றார்கள்.

كيف ترقى رقيك الانبياء ياسماء ما طاولتها السماء

لم يساووك في علاك وقد حال ثناء منك دونهم وسناء

انما مثلوا صفاتك للناس كما مثل النجوم الماء

انت مصباح كل فضل فما تصدر الا عن ضوئك الاضواء

لك ذات العلوم من عالم الغيوب ومنه لآدم الاسماء

لم يزل في ضمائر الغيب يختار لك الامهات والآباء

ما مضت فترة من الرسل الا بشرت قومها بك الانبياء

تتباهى بك القصور وتسمو بك علياء بعدها علياء

وبدا للوجود منك كريم من كريم آبائه كرماء

فهنيئا لآمنة الفضل الذي شرفت به حواء

يوم نالت بوضعه ابنة وهب من فخار مالم تنله النساء

وأتت قومها بأفضل مما حملت قبل مريم العذراء

அல்லாஹ்வின் அன்பரே! வானம் போன்று உயர்வுடைய உங்கள் உயர் பதவியை நபிமார்கள் எவ்விதம் எத்துவர்? வானமும் அதற்கு நிகரன்று.

நபியே! நாயகமே! எந்த நபியும் உங்களுக்கு சம

மன்று. உங்களது நூரானியத்திற்கும் உயர்தன்மைக் கும் அவர்கள் மத்தியில் அவர்கள் உங்களைப்பற்றி மக்களிடையே எடுத்தியம்புகையில் தண்ணீரில் நட்சத்திரங்களை போன்றவர் என ஒப்புவமை செய்து கூறுகின்றனர்.

சகல அருட்கொடைகளுக்கும் நீங்கள் விளக்கான வர்கள். உங்கள் ஒளியில் நின்றுமே மற்றுமுண்டான சகலமும் உண்டாகிறது.

அல்லாஹ் உங்களுக்கு அவன் சார்பாக மறைவான நிகழ்வுகளை அறியும் ஆற்றலை வழங்கியுள்ளான். உங்க ளுக்கு அளிக்கப்பட்டதில் சிலதே ஆதம் நபி அலைஹிஸ் ஸலாமவர்கள் பெற்றது. அந்த அல்லாஹ் என்றும் மறைமுகமாக தங்களுக்கென பெற்றோர்களை தெரிவு செய்த வண்ணமாயிருந்தான். ரஸுல்மார்களில் எவரும் அவரவரது கால சமூதாய மக்களுக்கு உங்களை நினைவு கூர்வது மூலம் சுபச்செய்தி கூறாதுமில்லை.

நீங்கள் இவ்வையகத்தில் இருப்பதனால் இவ்வைய கத்திலுள்ள யாவும் உங்களைக் கொண்டு பெருமை பேசுகின்றது. உங்கள் பொருட்டால் உங்கள் உயர்வின் மூலம் அவை உயர்வையும் அடைந்து கொள்கின்றன.

அன்னை தலைவி ஆமினாவே! இவ்வையக சமூதாயத்திற்கு பெற்றெடுத்துத்தந்த வெளிப்பாட்டால் அவரது பெற்றோரும் சிறப்பானார். ஸெய்யிதத்துனா ஆமினா! எவர்களைக் கொண்டு எம்மருமை தாய் ஹவ்வா சிறப்படைந்தார்களோ அத்தகையவரை ஈன்ற தற்கு எம் வாழ்த்துக்கள். பெருமானார் ﷺ அவர் களை பெற்றெடுத்ததால் ஹழ்ரத் ஸெய்யிதத்துனா ஆமினா அவர்கள் பெற்றுக்கொண்ட உயர்வை மகிமையை பிற எந்தப் பெண்ணாலும் பெற முடியாது.

ஸெய்யிதத்துனா மர்யம் அலைஹஸ்ஸலாமவர்கள் அவர் சமுதாய மக்களுக்கு வழங்கிய புதல்வரை விட நாயகியே! நீங்கள் பன்மடங்கு சிறப்புடைய ஒருவரை வழங்கினீர்கள்.

இமாம் இப்னு ஹாதிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தனது தப்ஸீரில் ஹழ்ரத் இப்னு அதாயினது தந்தை அவர்கள் ஹழ்ரத் ஹம்ஸாவிற்கு கூறியதை மூஸா பின் அய்யூபுன் நஸீபி மூலம் கிடைக்கப்பெற்ற,...

بين النبي صلّى الله عليه وسلّم وبين آدم تسعة واربعون ابا

எம் கோமான் நபிகள் பிரான் ﷺ அவர்களுக்கும் ஹஜ்ரத் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குமிடையே நாற்பத்தொன்பது தலைமுறைகள் என்ற அறிவிப்பினைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹழ்ரத் அபூநயீம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "தலாயிலுந்நுபுவ்வத்" எனும் தனது நூலில் பூமான் நபி ﷺ அவர்களினது அருமைத் தாய் பற்றிய ஒரு தகவலை பலவீனமான ஸனதுடன் உம்மு சமாஆ பிந்த் அபீ ரஹ்ம் அவர்களின் தாயார் அறிவிப்பதாவது.

شهدت أمنة ام رسول الله صلّى الله عليه وسلّم في علته التي ماتت فيها ومحمد غلام يقع له خمس سنين عند رأسها فنظر الى وجهه ثم قالت...

நான் ரஸூலே கரீம் ﷺ அவர்களின் தாயார் மரணப்படுக்கையில் வீற்றிருக்கும் சமயத்தில் சந்திக்கச் சென்றிருந்தேன். அங்கே அவர் புதல்வர் நபியவர்கள் ஐந்து வயது குழந்தையாய் தாயின் அருகிலே அமர்ந்திருந்